**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.13/2016**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | செந்தில் வைரவன் | Prosecution | P.W-5 LW-5<br>Chief and Cross |
| Husband/Father Name | செல்வராஜ் | Defence | |
| Village | NSP நகர் | Taluk | |
| Calling | | Religion | |
| Age | 54/2025 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 07.01.2025

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மேற்படி முகவரில் வசித்து கேபிள் டிவி ஆபரேட்டர் வேலை செய்து வருகிறேன். அசா.1, அசா.2 மற்றும் அசா.4 யை எனக்கு தெரியும். கடந்த 04.05.2013 ந்தேதி அசா.1 ஊருக்கு சென்றிருந்த விபரம் எனக்கு தெரியும். மறுநாள் காலை அசா.1 தமிழரசி வீட்டிற்கு வந்து பார்த்து சத்தமாக அழுது கூச்சலிட்டு கொண்டிருந்தார். நான் சென்று பார்த்த போது வீடு உடைந்து கிடந்தது. வீட்டில் இருந்த பணம் நகை அனைத்தும் திருடு போயிருந்ததாக கூறினார்கள். அதன் பின்னிட்டு போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்தது குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு தெரியாது. நான் சம்பவ இடத்திற்கு சுமார் 9.00 மணிக்கு சென்று பார்த்தேன். தமிழரசி என்றைக்கு ஊருக்கு சென்றார் என்ற விபரம் எனக்கு தெரியாது. என்ன பொருட்கள் திருடு போனது என்று கேள்விபட்டு தான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். போலிசார் 05.05.2013 ந்தேதி காலை 10.00 மணிக்கு விசாரித்தார்கள். எந்த போலிஸ் விசாரித்தது என்று எனக்கு தெரியாது. புகார்தாரர் எனது தெருக்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளபட்டது**

**மறுவிசாரணை இல்லை.**